அது நின்றுவிட்டது என்றும், இந்த ஆண்டு அவசியம் செய்து தாருங்கள் என்றும் கேட்டிருக்கிறேன். இந்தப் பள்ளி வைகை ஆற்றின் கரையில் இருக்கின்றது. தற்போது ஐந்தாறு வருடமாகத் தண்ணீர் வராமல் இருப்பதால் மாணவர்கள் போய் வரக் கஷ்டம் இல்லாமல் இருக்கிறது. ஆனால் வைகையில் வெள்ளம் வரும் காலத்தில் ஆற்றுக்கு அந்தப் பக்கம் இருப்பவர்கள் பள்ளிக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்டுக் கொண்டதை நினைவில் கொண்டு, இந்தக் கேள்வியையும் மனதில் கொண்டு இந்த ஆண்டே அதை முடித்துத் தருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று தக்க நடவடிக்கை எடுத்து அந்த மாணவர் விடுதி அமைக்க தக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. துரைபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அமைத்துத் கொடுத்தால் எதிர் காலத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் சேர்த்து, மாண்புமிகு ஆதி திராவிட நல அமைச்சர் அவர்களையும் சேர்த்து, இந்தச் சிறுவன் படித்த அந்தப் பள்ளியின் காலத்தைப் பற்றிப் பேசும்போது இவர்களுடைய காலத்தில்தான் அந்த விடுதி வந்தது என்ற பெருமை நம் எல்லோருக்கும் கிடைக்கும் என்று கூறி அமைச்சரின் பதிலுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடையே பெறுகிறீர்களா ! (சிரிப்பு).

அரசினர் தோட்டம் அரசு மருத்துவமனையை
விரிவாக்குதல்

* 2624—திரு. அ. இரகுமான்கான் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், ஊழியர்கள் வசிக்கும் சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள அரசு மருத்துவமனையை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

1990 ஏப்ரல் 24]

அரசினர் தோட்டத்திலுள்ள அரசு மருத்துவமனையை விரிவாக்கும் நடவடிக்கை எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் தோட்டத்தில் ஏராளமான இடம் காலியிடமாக இருக்கிறது. ஏற்கெனவே கலைவாணர் அரங்கத்தின் அருகில் பழைய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அலுவலகத்திலிருந்து மருத்துவமனை இப்போது பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு முன்பாக சின்னஞ்சிறு அறைக்குள் செயல்பட்டு வருகிறது. எனவே இதை நவீனப்படுத்தி எல்லா வசதியுடன் கூடிய ஒரு மருத்துவமனையாக ஏற்படுத்தி, அரசினர் தோட்டத்தில் இதனுடைய விரிவாக்கத்தைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் இருக்கிற மருத்துவமனை பகுதி நேர மருத்துவமனையாக காலை 7 மணியிலிருந்து மாலை 1–00 மணி வரையில் தான் செயல்பட்டு வருகிறது. இதற்கு அருகாமையில் 1கிலோ மீட்டர் தூரத்திலே பொது மருத்துவமனை இயங்கி வருகிறது. இதற்கு வேண்டிய சிறப்பு வசதிகள் அனைத்தும் பொது மருத்துவமனையிலே செய்து கொடுக்கப்படுகிறது. எனவே இது ஒரு பகுதி நேர மருத்துவமனையாக மட்டுமே செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : தலைவர் அவர்களே, பக்கத்திலே பொது மருத்துவமனை இருக்கின்றது என்று சொல்கிற காரணம் எனக்குச் சரியாகத் தெரியவில்லை. அரசினர் தோட்டத்திலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நம்முடைய இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன், திரு. இளம்வழுதி, அண்ணன் லத்தீப் போன்ற....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பட்டியலை வேண்டுமானால் நான் அப்புறமாக அவைக்கு அனுப்புகிறேன். இப்போது கேள்வியை மட்டும் கேளுங்கள். (சிரிப்பு).

திரு அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நோய் பகுதி நேரமாக வராது (சிரிப்பு). மக்களுக்குச் சேவை செய்கின்ற காரணத்தால்—திடீரென்று இருதய நோய் பாதிப்பு ஏற்பட்டால் எக்ஸ்ரே எடுக்கக்கூடிய (குறுக்கீடு) ஹாஸ்பிட்டல் என்று சொன்னார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் இருதய நோய் இருப்பது மாதிரி ஏதாவது பிரச்சினை இருக்கிறதா? (சிரிப்பு).

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடியதை ஹாஸ்பிட்டல் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே எக்ஸ்ரே, ப்ளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், இ. சி. ஜி. போன்ற வசதிகள் எதுவும் இல்லை. வெறும் டாக்டர், டாக்டர் அம்மா, இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். அத்தோடு ஒரு ரெக்கார்ட் கிளார்க் இருக்கிறார். அத்தோடு ஒரு பீமேல் அட்டெண்டர் இருக்கிறார். அந்த சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய அரசினர் தோட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் மக்கள் தான். எனவே பக்கத்திலே ஹாஸ்பிட்டல் இருக்கிறது என்பதற்காக இந்த மருத்துவமனையில் எதுவும் இல்லாத நிலை இருப்பது சரியல்ல. ஆகவே இங்கே எல்லா வசதியும் செய்து கொடுக்க அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்தகம் பெரும்பாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்றே உருவாக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக முதலுதவி செய்கிற மருத்துவ மனையாக மட்டுமே அது செயல்படுகிறது. தேவைப்படுமேயானால் உடனடியாக அவர்களை எடுத்துச் செல்வதற்கு நோயாளி ஊர்தி ஒன்றும் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருக்கிறது. ஆக இப்படி அவர்களை எடுத்துச் செல்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இதை மேம்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*3247—திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மணவாளக்குறிச்சியிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அவை தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மணவாளக்குறிச்சியிலும், ஆளூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது அமைப்பதற்கு சாத்தியம் இல்லை.